ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_{3}$மாந்தமஹாதே$_{3}$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 9.4 – காவார்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_{3}$ராமாநுஜ மஹாதே$_{3}$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 9.4 – காவார்

‡ காவார் மடல் பெண்ணை ⋆
அன்றில் அரி குரலும் ⋆
ஏவாயின் ஊடியங்கும் ⋆
எஃகின் கொடிதாலோ ⋆
பூவார் மணம் கமழும் ⋆
புல்லாணி கை தொழுதேன் ⋆
பாவாய் ! இது நமக்கோர் ⋆
பான்மையே ஆகாதே ‖ **9.4.1** ‖

முன்னம் குறள் உருவாய் ⋆
மூவடி மண் கொண்டளந்த ⋆
மன்னன் சரிதைக்கே ⋆
மால் ஆகிப் பொன் பயந்தேன் ⋆
பொன்னம் கழிக் கானல் ⋆
புள் இனங்காள் ! புல்லாணி ⋆
அன்னம் ஆய் நூல் பயந்தாற்கு ⋆
ஆங்கிதனைச் செப்புமினே ‖ **9.4.2** ‖

வவ்வித் துழாய் அதன் மேல் ⋆
சென்ற தனி நெஞ்சம் ⋆
செவ்வி அறியாது ⋆
நிற்குங்கொல் நித்திலங்கள் ⋆
பவ்வத் திரை உலவு ⋆

புல்லாணி கை தொழுதேன் ⋆
தெய்வச் சிலையாற்கு ⋆
என் சிந்தை நோய் செப்புமினே ॥ **9.4.3** ॥

பரிய இரணியனதாகம் ⋆
அணி உகிரால் ⋆
அரி உரு ஆய்க் கீண்டான் ⋆
அருள் தந்தவா ! நமக்கு ⋆
பொரு திரைகள் போந்துலவு ⋆
புல்லாணி கை தொழுதேன் ⋆
அரி மலர்க் கண் நீர் ததும்ப ⋆
அந்துகிலும் நில்லாவே ॥ **9.4.4** ॥

வில்லால் இலங்கை மலங்கச் ⋆
சரம் துரந்த ⋆
வல்லாளன் பின் போன ⋆
நெஞ்சம் வரும் அளவும் ⋆
எல்லாரும் என் தன்னை ⋆
ஏசிலும் பேசிடினும் ⋆
புல்லாணி எம்பெருமான் ⋆
பொய் கேட்டிருந்தேனே ॥ **9.4.5** ॥

சுழன்றிலங்கு வெங்கதிரோன் ⋆
தேரோடும் போய் மறைந்தான் ⋆
அழன்று கொடிதாகி ⋆
அஞ்சுடரில் தான் அடுமால் ⋆
செழுந் தடம் பூஞ்சோலை சூழ் ⋆
புல்லாணி கை தொழுதேன் ⋆

இழந்திருந்தேன் என்தன் ⋆
எழில் நிறமும் சங்குமே ॥ **9.4.6** ॥

கனை ஆர் இடி குரலின் ⋆
கார் மணியின் நாவாடல் ⋆
தினையேனும் நில்லாது ⋆
தீயில் கொடிதாலோ ⋆
புனை ஆர் மணி மாடப் ⋆
புல்லாணி கை தொழுதேன் ⋆
வினையேன் மேல் வேலையும் ⋆
வெந்தழலே வீசுமே ॥ **9.4.7** ॥

தூம்புடைக் கை வேழம் ⋆
வெருவ மருப்பொசித்த ⋆
பாம்பின் அணையான் ⋆
அருள் தந்தவா நமக்கு ⋆
பூஞ்செருந்தி பொன் சொரியும் ⋆
புல்லாணி கை தொழுதேன் ⋆
தேம்பல் இளம் பிறையும் ⋆
என் தனக்கோர் வெந்தழலே ॥ **9.4.8** ॥

வேதமும் வேள்வியும் ⋆
விண்ணும் இரு சுடரும் ⋆
ஆதியும் ஆனான் ⋆
அருள் தந்தவா நமக்கு ⋆
போதலரும் புன்னை சூழ் ⋆
புல்லாணி கை தொழுதேன் ⋆

ஓதமும் நானும் ⋆
உறங்காதிருந்தேனே ॥ **9.4.9** ॥

‡ பொன் அலரும் புன்னை சூழ் ⋆
புல்லாணி அம்மானை ⋆
மின் இடையார் வேட்கை நோய் கூர ⋆
இருந்ததனை ⋆
கல் நவிலும் திண் தோள் ⋆
கலியன் ஒலி வல்லார் ⋆
மன்னவர் ஆய் மண் ஆண்டு ⋆
வானாடும் உன்னுவரே ॥ **9.4.10** ॥

அடிவரவு — காவார் முன்னம் வவ்வி பரிய வில் சுழன்று கனை தூம்புடை வேதம் பொன்னலரும் தவளம்

காவார் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்